**புத்தசாசன நிதியம் - 2012**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட முக்கிய விடயங்கள் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்குப் போதிய மற்றும் உகந்த கணக்காய்வுச் சான்றுகளை என்னால் பெற முடியாது போயிற்று. அதன் காரணமாக, இந் நிதிசார் கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயத்தை வெளியிட முடியாதுள்ளது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 உயர் கணக்கீட்டு நடை முறைகளுடன் இணங்காமை**

உயர் கணக்கீட்டு நடைமுறைகளுக்கமைய, நிதிக்கூற்றுக்களுடன் வெளிக்கொணரப்பட வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் எதுவும் நிதிக்கூற்றுக்களில் வெளிக்கொணரப்படவில்லை.

**1.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதியத்திற்குச் சொந்தமான அனுராதபுரம் புனித பூமியில் பசவக் குளம் எனுமிடத்தில் அமைந்துள்ள 02 ஏக்கர் 1 றூட் 13 பேர்ச்சஸ் விஸ்தீரனமான காணியின் பெறுமதி ரூபா 10,000 ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இக் காணியின் நியாயமான விலை மதிப்பு மற்றும் காணியைக் குத்தகைக்கு வழங்குவதால் பெறக் கூடிய வாடகை வருமானம் என்பவற்றைக் கணக்கீட்டு அறிக்கையில் காண்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியம் பிரசுரித்து விற்பனை செய்யும் புத்தகங்களுக்குரிய இலாபம் மற்றும் புத்தகங்களது எண்ணிக்கையைத் தெளிவாகக் காட்டும் விதத்தில் வெவ்வேறாகக் கணக்குகள் பேணப்படவில்லை.

(இ) பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 13,900,954 குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டில் கணக்காய்வுக்குள்ளான 8 கணக்கு மீதிகளை மீளாய்வாண்டிற்கெனச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் ஆரம்ப மீதியாக முன்கொண்டு வரும் போது இரண்டு கணக்குகளின் மீதிகள் ரூபா 87,292 கூடுதலாகவும் 6 கணக்குகளின் மீதிகள் ரூபா 9,356,134 குறைவாகவும் காட்டப்பட்டிருந்தன.

(உ) மக்கள் வங்கியின் யூனியன் பிளேஸ் கிளையில் புத்தசாசன நிதியத்தின் பெயரில் உள்ள ரூபா 30 மில்லியன் பெறுமதியான நிலையான வைப்பு கணக்கீட்டு அறிக்கையில் காண்பிக்கப்படவில்லை.

(ஊ) அவ்வாறே, மக்கள் வங்கியில் முதலீடு செய்யப்பட்ட ஏனைய நிலையான வைப்புகளது மீதி ரூபா 2,406,644 கூடுதலாகக் கணக்கீட்டு அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மாதாந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றை நிதியம் தயாரித்திருந்தபோதும், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட காசேடு மாதாந்தம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, குறித்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்று எந்த மீதியின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது என்பதும் கணக்காய்வில் புலனாகாதிருந்தது. இதன் காரணமாக, வங்கிக் கணக்கினக்கக் கூற்றுக்களது பிழையற்ற தன்மையை உறுதிசெய்ய முடியாதிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியில் நிலவிய காசு மீதி ரூபா 12,670,606 ஆகும்.

(ஏ) 2008 ஆம் ஆண்டினது பரீட்சை மீதியில் இணக்கமுறாதிருந்த மீதியாகிய ரூபா 126,679 சீராக்கல் கணக்கொன்றில் வரவு வைக்கப்பட்டு அம் மீதியை இனங்காணாது 2009 ஆம் ஆண்டிற்கான புத்தசாசன நிதியக் கணக்கில் பதிவழிக்கப்பட்டிருந்தது. 2012 திசெம்பர் 31 அன்றும் அம் மீதியை இனங்கண்டு கணக்கறிக்கைகளில் தேவையான சீராக்கங்களைச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கணக்கீட்டு ஆண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

தனியார் புத்தகப் பிரசுராலயத்தில் புத்தகங்களை அச்சிடுவது தொடர்பாகப் பெற வேண்டிய ரூபா 20,513,820 அறவீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை 2011 ஆம் ஆண்டு தொடக்கம் மேற்கொள்ளப்படாதிருந்தது.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே குறிப்பிடப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக அவற்றிற்கெதிரே சுட்டிக்காட்டப்பட்ட சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் அக் கொடுக்கல் வாங்கல்களைத் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

| | கொடுக்கல் வாங்கல் விபரம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| (அ) | வைப்புத் தொகையைத் திருப்பிப் பெறுதல் (சாமனேற கெபகரு – பங்களிப்பு முறை) | 12,000,000 | பணத்தைத் திருப்பிப் பெறுவதற்கான நிர்வாக சபை அங்கீகாரமும் நிதியத்தைப் பயன்படுத்தியமை தொடர்பான விபரமும் |
| (ஆ) | புத்தகக் கையிருப்பு அழிவுக்குள்ளானமை | 262,286 | பொருட் கணிப்புச் சபை அறிக்கை |
| (இ) | எஞ்சிய புத்தகக் கையிருப்பு | 1,744,765 | - மேற்படி - |
| (ஈ) | திறைசேரி உண்டியலும் நிலையான வைப்புகளில் முதலீடும் | 353,043,425 | முதலீட்டு விபரங்களை உள்ளடக்கிய பதிவேடுகள், முதலீட்டுப் பேரேடு மற்றும் விரிவான பட்டோலை |
| (உ) | நெதிமால பௌத்த நிலையத்தின் பொறுப்பில் உள்ள புத்தகங்கள் | 8,248,169 | பொருட் கணிப்புச் சபை அறிக்கை, பொறுப்பில் உள்ளதைக் குறிக்கும் உறுதிப்படுத்தல் |
| (ஊ) | கொடுப்பனவு செய்ய வேண்டிய சாமனேற நிறுவனங்களது தவணைப்பணம் | 795,000 | கணிப்பீட்டு விபரம் |
| (எ) | கொடுப்பனவு செய்ய வேண்டிய வட்டி | 107,218 | - மேற்படி - |
| (ஏ) | முற்பணக் கொடுப்பனவு | 8,569,440 | கொடுப்பனவு விபரமும் மீதிகளை உறுதிப்படுத்தலும் |

**1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இனங்காமை கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 1990 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க புத்தசாச அதிகாரச் சட்டம் | |
| 3.1 மற்றும் 3.1 (5) ஆம் பிரிவுகள் | நிதியத்தின் நிர்வாகம், முகாமைத்துவம், கட்டுப்பாடு என்பன அதன் நிர்வாக சபையைச் சார்ந்தாகும் சபையின் கூட்டங்கள் மற்றும் கூட்டங்களின் போது கடைப்பிடிக்கப்படும் நடைமுறைகள் என்பன சபையால் ஒழுங்கு செய்யப்படலாம். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது நிர்வாக சபை ஒரேயொரு தடவை மாத்திரமே கூட்டத்தை நடாத்தியிருந்தது. சபையினது பணிகளுக்கான நடைமுறைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| 4.1 ஆம் பிரிவு | நிர்வாக சபைக்கு உதவியளிக்கவும் ஆலோசனைகளை வழங்கவும் மூன்று பீடங்களைச் சேர்ந்த மஹாநாயக்க தேரர்கள் நால்வர், அமைச்சின் செயலாளர், பௌத்த மத விவகார ஆணையாளர், சனாதிபதி என்போரால் நியமிக்கப்படும் 5 அங்கத்தவர்கள் அடங்கிய 11 அங்கத்தவர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு நியமிக்கப்பட வேண்டுமாயினும், அந்த ஆலோசனைச் சபை நியமித்திருக்கவில்லை. |

| | |
|---|---|
| 6 ஆம் பிரிவு | வெளி நாட்டிலிருந்தோ உள்ளூரிலிருந்தோ எத்தோற்றுவாய் மூலமேனும் பெறப்படும் பணத்தைப் பொறுப்பேற்றலும் புத்த சாசனத்தைப் பாதுகாத்தலும் அதனது வளர்ச்சிக்குமான விடயங்களில் அதனைப் பயன்படுத்தலும் நிதியத்தின் பணியாகும். எனினும், 2004 ஆம் ஆண்டின்போதான சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட விகாரைகளைக் கட்டியெழுப்புவதற்கென பெறப்பட்ட ரூபா 1,348,796 தொகையானது 2013 திசெம்பர் 31 வரை குறித்த நோக்கிற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| பிரிவு 12.3 | நிதியத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கு கணக்காளர் தலைமை அதிபதி செலவிடும் தொகையைத் தீர்த்து வைப்பதற்குச் சபை திர்மானிக்கும் ஏதாவதொரு ஊதியத்தை நிதியத்தின் வருமானத்திலிருந்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கொடுப்பனவு செய்ய வேண்டுமாயினும் அக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| பிரிவு 17 | நிதியத்தின் வருமானம் வரிச்சலுகைக்குரியதாகும். எனினும், தேசிய சேமிப்பு வங்கி நிலையான வைப்பிற்கான வட்டி வருமானத்தில் இருந்து கழித்துக் கொள்ளப்பட்ட நிறுத்தி வைத்த வரியாகிய ரூபா 347,381 நிதியத்தில் செலவு வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீ.எப். 423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை.

---

| | | |
|---|---|---|
| (i) | 4.1(அ),(ஆ),(இ) பந்திகள் | நிதியத்தின் நோக்கத்திற்கமைய பாதீட்டு செயற்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு மாண்புமிகு அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ii) | பந்தி 4.2.(ஆ) | நிதியத்தின் பெறுவனவுகள் யாவற்றிக்கும் பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்படாததுடன் முதலீடுகள் தொடர்பாகப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | பந்தி 4.2.(இ) | வங்கிக் கணக்கு தொடர்பான புத்தகங்கள், அறிக்கைகள் என்பன கணக்கிணக்கஞ் செய்யப்பட்டு காலாண்டுக்கொரு முறை பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறு நடைபெற்றிருக்கவில்லை. |
| (iv) | பந்தி 4.2 (ஊ) | நிதியம் தொடர்பாகப் புத்தகங்களும் பதிவேடுகளும் சரிவரப் பேணப்பட்டுத் திருப்திகரமான கணக்கீட்டு முறை பேணப்பட வேண்டும். எனினும், தயாரிக்கப்பட்ட கணக்கீட்டு அறிக்கை மற்றும் அதனோடிணைந்த பதிவேடுகளில் இவ்வறிக்கையின் 02 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டவாறு குறிப்பிடத்தக்க குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியத்தின் வருமானமும் செலவினமும் முறையே ரூபா 29,966,509 மற்றும் ரூபா 2,241,441 என்பனவாகும். இதனால் அச் செயற்பாட்டு விளைவுகளால் ஏற்பட்ட மிகை ரூபா 27,725,095 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் வருமானமும் செலவினமும் முறையே ரூபா 32,085,975 மற்றும் ரூபா 5,256,606 என்பனவாகும். இதனால் முன்னைய ஆண்டின் மிகை ரூபா 26,829,369 ஆகியது. இதற்கமைய, நிதிசார் விளைவுகளில் ரூபா 895,726 அதிகரிப்பு தென்படுகின்றது. மீளாய்வாண்டின், போது நிதியம் நன்கொடை எதனையும் பெறவில்லை. நிதிய முகாமைத்துவத்தின் வினைத்திறமையின்மையும் கவனமின்மையும் நிதியம் பெறும் பொதுமக்களது நன்கொடை படிப்படியாக குறைவதற்கான காரணமாகின மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான முதலீடுகள் ரூபா 353 மில்லியன் ஆகும். அதன் மூலம் பெறப்பட்ட வருமானம் ரூபா 30 மில்லியன் ஆகும். முதலீட்டு வருமானத்திற்கு ஒப்பான மீளாய்வாண்டின் மொத்தச் செலவினம் ஏறக்குறைய 7.47 சதவீதமாகும். அவ்வாறே, நிதியத்தை உருவாக்கியதன் நோக்கம் நிறைவேறுவதன் பொருட்டு திட்டமிட்டுச் செயற்படாமையால் நிதியத்தின் ஒட்டு மொத்த வருமானத்தில் 92 சதவீதத்திற்கும் மேலான தொகை மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டின் போதும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சாமனேற கெபகறு பங்களிப்பிற்குரிய ரூபா 28 மில்லியன் ஆரம்ப முதலீட்டின் மூலம் பெறப்படும் நலனைப் பயன்படுத்தி சாமனேற பங்களிப்பை அமுலாக்க வேண்டுமாயினும், முன்னைய 5 ஆண்டுகளுக்குமெனப் பெறப்பட்ட ரூபா 15,926,160 வட்டி வருமானத்தில் பங்களிப்பிற்கு ரூபா 2,595,000 மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. அது வருமானத்தில் 16.29 சதவீதமாகும் செலவினத்தைப் பரீசீலிக்கையில் அது முறையாக அமுலாக்கப்படாமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புத்தசாசன நிதியத்திற்குரிய ரூபா 353 மில்லியன் தொகை சில வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த போதும், அந் நிலையான வைப்புக்களை வருடாந்தம் புதுப்பிப்பதற்கோ அல்லது மீண்டும் முதலீடு செய்வதற்கோ மேற்கொள்ளப்பட்ட தகவல்கள் எதுவும் குறித்த கோவைகளில் இருக்கவில்லை.

(இ) புத்தசாசன நிதிய ஆளுநர் சபை மேற்கொண்ட தீர்மானங்களுக்கமைய பாளி அட்டகதா புத்தகங்களும் வேறு பௌத்த புத்தகங்களும் சிங்களத்தில் மொழி பெயர்ப்புச் செய்யப்படுதல், அச்சிடப்படல், விற்பனை செய்யப்படல் போன்ற நடவடிக்கைகள் தனியார் அச்சகம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

i. 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புத்தகங்களை அச்சிட்டு விற்பனை செய்ததன் மூலம் நிதியம் பெற வேண்டிய மீதி ரூபா 3,696,212 அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. 2013 ஒக்டோபர் 31 ஆந் திகதியளவில் புத்தகங்கள் அச்சிடப்பட்டு 3 ஆண்டுகள் கடந்து விட்டபோதும், அச்சிடப்பட்ட புத்தகங்களை முறையாகப் பொறுப்பேற்றுக் களஞ்சியப்படுவதற்கான ஒழுங்குகள் அமுலாகவில்லை.

iii. மொழிபெயர்ப்புக்குள்ளாகி அச்சிடப்பட்டதும், விற்பனைக்குள்ளாகியதுமான புத்தகங்களின் எண்ணிக்கை, எஞ்சிய புத்தகங்களது எண்ணிக்கை என்பவற்றை வெவ்வேறாக இனங்காணும் விதத்தில் பதிவேடுகளை நிதியம் தயாரித்திருக்கவில்லை. தனியார் நிறுவனம் ஒன்று வழங்கிய அறிக்கையின் அடிப்படையிலேயே கணக்குகள் தயாரிப்பட்டிருந்தன.

iv. இதற்கமைய, புத்தக மொழி பெயர்ப்பு மற்றும் அச்சிடல் சம்பந்தமாக முறையான கட்டுப்பாட்டை நிதியத்தால் மேற்கொள்ள முடியாது போனமையால் முறையற்ற விதத்தில் புத்தகங்களை மொழி பெயர்த்து அச்சிட்டு விற்பனை செய்வதன் மூலம் அத்தனியார் நிறுவனத்திற்கு வாய்ப்பிருந்ததை நிர்வாசக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

v. 2006 ஜனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.2 பிரிவின் பிரகாரம், பௌத்த புத்தகங்களது மொழி பெயர்ப்பு மற்றும் அச்சிடல், விற்பனை தொடர்பாகக் விலைகள் கோரப்படாது தனியார் நிறுவனம் ஒன்றிடம் அவ் வேலை ஒப்படைக்கப்பட்டு அதற்கென 2009 முதல் 2011 வரையான 3 ஆண்டுகளின் போது முற்பணமாக ரூபா 8,569,440 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.2 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டதுமான சொத்துக்கள்

(அ) விற்பனையற்று வெறுமனே இருந்த புத்த ஜயந்தி காசுகளின் பெறுமதி ரூபா 317,400 ஆகும்.

(ஆ) பல்வேறு நோக்கங்களுக்காக நிதியத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 12 நிதியங்களுக்குரிய ரூபா 1,448,096 கூட்டுத் தொகை குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாது 18 முதல் 20 ஆண்டுகளாக பயன்படுத்தப்படாதிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப் 423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 4.3 பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவுற்று 2 மாதங்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஒக்டோபர் 07 ஆந் திகதியன்றே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குக் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2011 ஒக்டோபர் 18 ஆந் திகதிய அரசாங்க கணக்கீட்டுக் குழுவால் குறித்த தினத்தில் கணக்குகளைச் சமர்ப்பிக்குமாறு வழங்கப்பட்ட கட்டளை புறக்கணிக்கப்பட்டு கணக்குகள் தாமதமாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 4.2 கூட்டிணைந்த திட்டம்

2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தின் தூர நோக்கும் செயற் பணியும் நிறைவேற்றப்படுவதன் பொருட்டு 3 ஆண்டுகளுக்குக் குறையாத கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்பாட்டுத் திட்டம்

வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டின் போது நிதியத்தில் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டன கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிதியப் பயன்பாடு

(ஆ) கணக்கீடு

(இ) செயலாற்றல்

(ஈ) புத்தக அச்சீடு, விற்பனை, களஞ்சியப்படுத்தல் என்பன

(உ) புத்தகங்களும் ஏடுகளும் முறையாகப் பேணப்படுதல்

(ஊ) சொத்துக்களை மீளமதிப்பிடுதல்

(எ) மதிப்பீட்டுக் கட்டுப்பாடு